(மு)ரைக்கிற நாய் கடிக்காது''
...ல்லுவார்கள். எல்லா நாய்களுக்
...பொருந்துமா என்று தெரியாது.
...திவிலக்கு இல்லாமல் எல்லா
...கட்சிகளுக்கும் இது பொருந்தும்
...ப்பத் திரும்ப அவர்களது நடத்
...ட்டுகின்றன. மிகச் சமீபத்திய
...த்திலிருந்து இந்திய ஆக்கிரமிப்பு
...தை வெளியேற்றும் விவகாரம்;
...டெல்லியை ஆளும் பாசிச ராஜீவ்
...ண்டனிட்டு திராவிடக் கட்சி
...க்கும் கோரிக்கைகள்.

...விடக் கட்சிகளின் வரலாறே இப்ப
...தான் என்பது இன்றைய இளைய
...பினர் பலருக்கும் தெரியாது.
...ல் திராவிட நாடு இல்லையேல்
என்று மகாதேவி சினிமா வில்
...பாணியில் சபதம் எடுத்தார்
...ஒருவனாகி, தள்ளாத வயோதிக
...காஞ்சிபுரத்து வீட்டுத் திண்ணை
...விட நாடு, திராவிட நாடு என்று
...ண்டே சாவேன்'' என்றார் அண்
...தனிநாடு பிரிவினைத் தடைச்சட்
...து என்று வதந்தி வந்தது. அவ்வ
...திராவிட நாட்டை உடைப்பிலே
...ட்டு ஓடி விட்டார்கள், பதவி சுகத்
...ண்டி!

...ராஜனையும், ஸ்ரீரங்கம் ரெங்க
... பீரங்கி வைத்துப் பிளப்பது
...?''
என்று முழங்கிய பகுத்தறிவு கும்
...த் தலைவர் கருணாநிதி ஆட்சி
...க்கும் ஆசையிலே அபிஷேகங்
...நடத்தினார். தேர்தலிலே வெற்றி
ஆட்சிக்கட்டில் ஏறமுடியுமா
...டம் பார்க்க நாடி சோதிடருக்கு
...னார். போலிச் சாமியார் பங்
...ாரத்தைக் கூட தேடிப்போய்
...கிக் கொள்கிறார்.

...டும்! திராவிட நாடோ பழங்
...ள் நம்பிக்கையோ தனிப்பட்ட
... ஆனால் பாசிச ராஜீவ் கும்பலின்
...டாட்சம் பெற்று பதவியிலே ஒட்
...டிருப்பதற்காக ஈழத் தமிழர்
... அடகு வைக்கிறார்களே, அது
...விவகாரம்; சகித்துக் கொள்ள முடி
...ம்!

...ஜூலை - இலங்கைத் தமிழர்
...ாலை கண்டு தமிழகமே
...ழுந்தது. சாதிச் சங்கங்கள், ரசிகர்
...கூட ஈழத் தமிழர்களுக்கு ஆதர
...ரமடைந்தன. ஜெயவர்த்தனே
...ம்பாவி தமிழ்நாட்டுச் சாலைச்
...ல் எல்லாம் எரிந்தன.

... பொதுவான எழுச்சி வேகத்
... அதுவும் இன்னொரு நாட்டின்

சூரத்தனம் - உதார் காட்டுவதற்கு திராவிடக் கட்சிகளுக்கு என்ன பயம்? உண்ணாவிரதம், பேரணி, கண்டனக் கூட்டம், மாநாடு, கடையடைப்பு, ரெயில் நிறுத்தம் என்று ஆரவாரம் செய்தது கருணாநிதி கட்சி. ஈழத் தமிழருக்காக உயிரையே தருவேன் என்று முழங்கியவர் எம்.எல்.ஏ. பதவியைக் கூட துறந்தாரே என உடன்பிறப்புக்கள் பெருமை பேசினர். எல்லாம் இந்தியா தலையிடாத வரையில்தான்!

ஈழத்தமிழரைக் காப்பதற்காக சிங்களவர் மீது படையெடுக்கும்படி கருணாநிதி கோரினார். அதற்கு வெளியில் மறுப்புத் தெரிவித்து வந்தபோதும், இலங்கை விவகாரத்தில் தலையிட்டு ஆக்கிரமிப்பு - ஆதிக்க - விரிவாக்கப் போர் தொடுப்பதற்கான இரகசிய தயாரிப்பு செய்து கொண்டிருந்தது, ராஜீவ் கும்பல். அதன் உளவுப்படையான ''ரா'' மூலம் ஈழப்போராளி அமைப்புகளுக்குள் ஊடுருவி பிளவுபடுத்தி ஒன்றை ஒன்று அழித்துக் கொள்ள செய்தது. இன்னொரு திராவிடக் கட்சியான எம்.ஜி.ஆர். கும்பல் ஆட்சியில் ஒட்டிக் கொண்டிருப்பதற்காக வேண்டி ராஜீவின் இரகசிய சதிவேலைகள் அனைத்துக்கும் உடந்தையாக இருந்தது.

ஈழத்தில் தமது ஏகபோக ஆதிக்கத்தை நிறுவுவதற்காக ''டெலோ''வைப் புலிகள் கொன்று ஒழித்தனர். அப்போது எம்.ஜி.ஆரின் அரவணைப்பில் இருந்த புலிகள், ''டெலோ''வின் புரவலராய் இருந்த கருணாநிதியை கொஞ்சமும் மதிக்கவில்லை.

''டெலோ'' செயலிழந்து போன பிறகு, ராஜீவ் - எம்.ஜி.ஆர் கும்பலின் சதிகளை எதிர்த்துப் போராடுவதற்குத் துணியாத கோழை கருணாநிதி, 'இனி ஈழப்பிரச்சினை குறித்து பேசவே மாட்டேன்' என்று ஒதுங்கி கொண்டார். ராஜீவ் - எம்.ஜி.ஆர் கும்பல் தமது ஈழ சதித்திட்டங்களைத் திணிப்பதற்காக ஈழப்போராளிகளைக் கைது செய்து, மிரட்டி, ஆயுதங்களைப் பறித்துக் கொண்டபோதும் கூட ஒப்புக்கு ஓரிரு கண்டன அறிக்கைகள் வெளியிடுவதோடு முடங்கிக் கொண்டார், கருணாநிதி. ஈழப்பிரச்சினையைப் பின்னுக்குத் தள்ளும் நோக்கத்தோடு இந்தி எதிர்ப்பு போராட்டத்துக்கு அதிமுக்கியத்துவம் கொடுத்தார்.

ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தைத் திணிப்பதற்கான புலிகளுடனான பேரங்கள் தோற்றுப்போகவே, யாழ்ப்போரைத் துவங்கினர். இதிலெல்லாம் ராஜீவ் கும்பலுக்கு உடந்தையாக இருந்த எம்.ஜி.ஆர் ஓய்வெடுக்க அமெரிக்காவுக்கு ஓடிப்போனார். எம்.ஜி.ஆர் கைவிட்டபிறகு புலிகள் கருணாநிதியின் ஆதரவை நாடினர். அதன்

# ஈழ விடுதலை
# திராவிடக் கட்சிகளின்
# பேடித்தனம்


கொண்டு அறிக்கைகள் விட ஆரம்பித்தார், கருணாநிதி. அப்போதும் ராஜீவின் ஆக்கிரமிப்பு - ஆதிக்க - விரிவாக்க நடவடிக்கைகளை எதிர்க்கவில்லை. 'மணம் முடித்து வைக்கப்போன புரோகிதரே தாலி கட்டிவிட்டார். அதாவது புலிகளின் ஒப்புதலின்றி ஒப்பந்தம் போட்டுவிட்டார், ராஜீவ்' என்று தான் கூறினர்.

யாழ்ப்போர் உக்கிரமாக்கி இந்திய இராணுவம் கொலை வெறியாட்டம்போடத் துவங்கிய பிறகும் 'சிங்கள இனவெறியன் ஜெயவர்த்தனேயின் சூழ்ச்சி - தந்திரங்களுக்கு ராஜீவ் பலியாகி விட்டார்' என்று தான் கருணாநிதி கட்சி வருணித்ததே தவிர 'ராஜீவின் ஆக்கிரமிப்புப்போர்' என்று ஒரு போதும் கூறத துணியவில்லை. யாழ்ப்போர் தீவிரமானபோது கருணாநிதியின் சவடால்கள் உச்ச கட்டத்துக்குப்போயின. இன்று தனது பதவியைக் காத்துக் கொள்வதற்காக ராஜீவின் முன்னே போய் எப்படிக் கூனிக்குறுகிக் கும்பிடு போடுகிறார் என்பதோடு அன்றைய கருணாநிதியின் சவாடல்களை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்!

''ஈழத்தமிழருக்காக 50,000 பேர் சிறை சென்றோம். 20 பேர் தீக்குளித்தனர். மீண்டும் அந்த நிலையை உருவாக்காதீர்'' என்று வேண்டிக்கொண்டார். ''குமரப்பா, புலேந்திரன் போன்ற 13 பேர் தமிழுக்காக, தமிழ் மண்ணிற்காக உயிர் விட்டனர். அத்தனை பேருக்காக நான் ஏன் அந்த முடிவை எடுக்கக் கூடாது. உயிரைத்தரவும் தயங்க மாட்டோம்'', என்று முழங்கினார். ''ஈழத்தமிழர்களை சுட்டுப்பொசுக்க ஆவடி டாங்கிகளா? வயிறு எரிகிறது. ரத்தக் கண்ணீர் வடிக்கிறேன்'' என்று பொங்கி அழுதார். ''நெஞ்சு வேதனையால் வெடிக்கிறது. உயிரைக் கொடுத்து ஈழத்தைக் காப்போம்''. ''5 கோடி மக்களுக்குத் தலைவன் அல்ல; 5 கோடி மக்களுக்காக உயிரைவிடத் தயாராக உள்ள தொண்டன்'' என்று மீண்டும் மீண்டும் உயிர்த் தியாக சபதமெடுத்தார். ''விடுதலைப் புலிகளைப் பூண்டோடு அழிக்க சதித்திட்டம். இந்தக் கொடுமையைத் தமிழகம் தாங்கிக் கொள்ளாது. இனியும் இராணுவத் தாக்குதலை நிறுத்தாவிட்டால் இந்திய அரசுக்கு இறுதி எச்சரிக்கை! என்னையே அர்ப்பணிக்கும் போராட்டத்துக்கு தயார்'' (முரசொலி 31/10/87). இப்படிக் கருணாநிதி எச்சரிக்கைவிட்டு இரண்டு ஆண்டுகளாகியும் புலிகளை அழிப்பது நிற்கவில்லை. இப்போது தாக்குதலை தீவிரமாக்கியுள்ள ராஜீவ் கும்பலோடு ஒரே அலைவரிசையில் ஈழம் பற்றிச் சிந்திப்பதாகக் கூறுகிறார்.

தான் மட்டுமா உயிர் மீது சபதமெடுத்தார், கருணாநிதி? ''புலிகளை அழிக்க இந்திய ராணுவத்தை அனுப்புவதா? அநியாயம்! அக்கிரமம்! ஆணவச்செயல்!'' ''இனியும் தமிழகம் பொறுத்துக் கொண்டிராது'' இந்தக் கொடுமையை வேதனையைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது. அடுக்குமா இந்த அட்டூழியம்? ''தமிழினம் அழியாமல் காப்போம். போர்க்குரல் எழுப்புவோம்''. ''சிங்கத்தமிழன் உணர்ச்சியைக் காட்டுவோம். வரலாறு படைப்போம்!''. ''கல்தோன்றி மண்தோன்றாமுன் தோன்றிய மூத்த தமிழ்க்குடியின் ரத்தத்தைக் குடிகுடி

## தமிழக சட்டமன்ற தேர்தல்களுக்கு முன்பு ஓட்டுப்பொறுக்கிகள் வேஷ




என்று குடிக்கிறார்களே! தமிழகமே கொந்தளித்து ஆர்த்து எழட்டும்.'' ''மனப்பால் குடிப்போரின் மமதையை அடக்கிட கிளம்பிற்று காண் தமிழ்ச் சிங்கக் கூட்டம்'' என்று தமிழரிடையே போர்முரசு கொட்டினார், கருணாநிதி.

''தமிழன் ஏமாந்த சோனகிரி, இலங்கைத் தமிழன் முழுவதுமாக அழிந்தால் கூட தமிழ்நாட்டுத் தமிழன் சொரணையற்ற சோத்துத் துருத்திகளாக, மாமிசப் பிண்டங்களாக இருப்பான் என்று ராஜீவ் கருதுகிறார்.'' ''தமிழினம் அழிக்கப்படுகிறது; தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்படுகின்றனர். அமைதிப்படையாம், அமைதிப் படை! இல்லை அமளி உருவாக்கும் படை! ஏன், தமிழனை அழிக்கும் படைக்கு அமைதிப்படையாம்!'' இந்த அநியாயத்தைத் தமிழ் நாடு கேட்காமல் இருந்தால் இதற்கு தமிழ்நாடு என்ற பெயரே பொருந்தாது. இதற்காகவா தமிழ் நாடு என்று பெயர் வைத்தார் அண்ணா? தமிழன் மானத்தோடு, உணர்வோடு, வீரத்தோடு வாழ்வான் என்று தானே பெயர் சூட்டினார்''. ''உணர்ச்சியுள்ள தமிழன்; பிணமாகாமல் இன்னமும் உயிரோடுள்ள தமிழன்; தமிழ்க் குருதி நரம்பு மண்டலத்திலே ஓடுகிற தமிழன்; தலைகுனிந்து கைபிசைந்து, கண்ணீர் மல்கி நிற்பதா? இல்லை! இல்லை! இங்கிருக்கும் தமிழனுக்கும் இதயம் உண்டு. அந்த இதயத்திலே வீரமும் தீரமும் உண்டு. தடித்த பிராணியாகி விடவில்லை''. ''நெஞ்சம் வேதனையால் வெடிக்கிறதே! உயிரைக் கொடுத்து ஈழத்தைக் காப்போம்.'' என்று போர்க்கள வீரஉரையாற்றினார்.

கருணாநிதி மட்டுமா? ''பிரபாகரன் தலைக்குக் குறிவைக்கப்படுகிறது. அந்த மாவீரனுக்கு ஏதாவது நேர்ந்தால்..... ரத்த ஆறு ஓடும். தமிழகம் தாங்காது. தமிழகம் ரத்தக்களறியாக மாறும் தமிழ்நாட்டு இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப்போராட வேண்டிய நிலையை ஏற்படுத்தாதீர்'' என்று ஆவேசமடைந்தார் காளிமுத்து. ''ராணுவத் தாக்குதலை நிறுத்தாவிட்டால் தமிழர்கள் பொங்கி எழுவார்கள்'' என்று எச்சரித்தார் குழந்தைவேலு. எம்.ஜி.ஆரின் எடுபிடிகளே இப்படி வீராவேசமடையும் போது கருணாநிதிக்குக் கேட்க வேண்டுமா?

''பிரபாகரன் தலைக்கு விலைபேசும் ரத்தக் காட்டேரி ஜெயவர்த்தனே சூழ்ச்சிக்கு இந்திய இராணுவம் பலியாகி விட்டது'' ஜெயலலிதா) என்றும் ''நான் மட்டும் அருகில் இருந்தால் ஜெயவர்த்தனே தலையைப் பந்தாடி இருப்பேன்'' (காளிமுத்து) என்றும் எம்.ஜி.ஆர். எடுபிடிகள் சிந்தித்த அதே பாணியில்தான் தமிழினத் தானைத் தலைவர் கருணாநிதி, தளபதி வீரமணி ஆகியோரும் பேசினர்.

''இந்திய ஆக்கிரமிப்புபோர்'' என்பதாக துணிந்துகூறி வெளியேறுபடி கேட்கவே இல்லை. மனித சங்கிலி போன்ற போராட்டங்களில் கூட ''ஆக்கிரமிப்பு ராணுவமே வெளியேறு'' என்று முழக்கங்கள் எழுந்ததாகக் கேள்விப்பட்டவுடன் பதறிப் போய் விட்டார் கருணாநிதி. ''போரை நிறுத்துங்கள்'' என்பதைத் தவிர வேறு முழக்கம் கூடாது என்று உடன்பிறப்புகளுக்குக் கண்டிப்பான உத்திரவு போட்டார். ''இந்திய இராணுவம் வெளியேற வேண்டும் என்று கோரவில்லை; போரை நிறுத்தும்படிதான் கோருகிறோம்'', என்று தெளிவாக்கிப் பேட்டி கொடுத்தார்.

இதற்குப்பின், இரண்டு ஆண்டுகள் இந்திய ஆக்கிரமிப்புப்போரும், ராணுவ அட்டூழியங்களும் தொடரவே செய்கின்றன. திராவிடக் கட்சிகளோ ஈழத் தமிழர்களை மறந்து விட்டு பிழைப்பு வாத அரசியல் நடத்தப் போய்விட்டார்கள். ''குரைக்கிற நாய் கடிக்காது'' என்பதற்கு எவ்வளவு பொருத்தமாக நடந்து கொண்டார்கள்!

அதுவும் கூட எதிர்க்கட்சியாக இருக்கும் வரையில்தான். ''ஆட்சிக்கு வந்த பிறகு ஈழப்பிரச்சினை குறித்து பொறுப்போடும் ராஜதந்திரத்தோடும் நடந்துகொள்கிறார்'' என்று பார்ப்பனிய ஏடுகள் பாராட்டின. ''நானும் ராஜீவும் ஒரே அலை வரிசையில் சிந்திக்கிறோம்'' என்று பகிரங்கமாக கருணாநிதியே அறிவிக்கும் அளவுக்கு ராஜீவ் த... லுக்கு விசுவாசியாக மாறிவிட்டார்.

இப்போது இலங்கை அரசே கோ... இராணுவத்தை விலக்கிக்கொள்ள ... ''இலங்கையைப் பிளவுபடுத்தி தனி ... அமைப்போம்'' என்று தனது அடி... களை விட்டு மிரட்டுகிறது ராஜீவ் ... ''தனிஈழம் அமைந்தால் இரட்டிப்பு ம... அடைவேன். இலங்கை அரசுடன் ... படிப்படியாக படைவிலக்கம் செய்... என்று ராஜீவ் கும்பலின் நிலைப்பா... ஆதரிக்கும் வகையிலே கூறினார் கரு... நிதி. பிறகு கட்சிப் பொதுக்குழுவைக்... இதையே தீர்மானமாக நிறைவேற்... னார்.

''இனப்படுகொலையை, இர... றியைத் தடுத்திட இலங்கை அதிபரிட... திரவாதம் பெற்று இந்தியப் படை... படிப்படியாக வாபஸ் பெற வழி... செய்ய வேண்டும்'' என்பதுதான் கரு... நிதி கட்சிப் பொதுக்குழு தீர்மான... டில்லி - ராஜீவ் அரசு இந்த தீர்மா... மெத்த மகிழ்ச்சியோடு வரவேற்றிரு... இதுதானே அவர்களுடைய நிலை... எம்.ஜி.ஆரை விட விசுவாசியா... சமயம் திறமையான விசுவாசி கி... விட்டதாக மத்திய அரசு மேலும் நம்... யோடு இருக்கிறது.

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு ஈழ... ஆதரவாக தமிழகமெங்கும் நிலவிய... இன்றில்லை. மிகமிகச் சிறிய அ... அமைப்புகளின் பிரச்சார இயக்கம் ... கக் குறுகிப் போய் விட்டது. ஈழவி... இயக்கத்தினரைத் தனிமைப்படுத்தி ... வெறியை வளர்ப்பதில் ஆக்கி... ஆதிக்க, விரிவாக்கவாதிகள் க... அளவு வெற்றி பெற்றுவிட்டார்க... மான இன உணர்வு அடிப்படையி... இல்லாது பிழைப்புவாத கவர்ச்சி ... யலை வைத்துத் தமிழ் மக்களைத் தி... கட்சிகள் ஏய்த்து வருகின்றன - ஆ... மைகளைத்தான் இது காட்டுகிறது